(எட்டாவது பாராளுமன்றம் - மூன்றாவது கூட்டத்தொடர் )

**இல. 96.]**

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

**2019 செப்தெம்பர் 17 செவ்வாய்க்கிழமை, பி.ப. 1.00 மணிக்கு**

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1.

23/ '18

கௌரவ ஹேஷா விதானகே,— உள்ளக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) இரத்தினபுரி மாவட்டத்தில், வெலிகெபொல பிரதேச செயலாளர் பிரிவில், அம்பேவில சந்தியிலிருந்து ரங்வல ஊடாக செல்கின்ற உடவெல வீதியானது பல வருட காலமாக திருத்தப்படாமையின் காரணமாக கடுமையாகச் சேதமடைந்துள்ள தென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி வீதி உரித்தாகும் நிறுவனம் யாது;

(ii) மேற்படி வீதியை போக்குவரத்துக்கு உகந்த வகையில் திருத்தியமைப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளதா;

(iii) ஆமெனில், திருத்தியமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்படும் திகதி மற்றும் பூர்த்தி செய்வதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள திகதி யாது;

(iv) மேற்படி வீதியை அபிவிருத்தி செய்வதற்கு மதிப்பீடு செய்யப்பட்டுள்ள நிதித்தொகை யாது;

(v) தற்போது மேற்படி நிதி ஒதுக்கப்பட்டுள்ளதா;

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2.

138/ '18

கௌரவ சமிந்த விஜேசிறி,— மலைநாட்டுப் புதிய கிராமங்கள், உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் சமுதாய அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) பதுளை மாவட்டத்தில், பெருந்தோட்டக் கம்பனிகளைச் சார்ந்ததாக சேவையாற்றுகின்ற ஊழியர்களிலும் அவர்களின் குடும்பங்களிலும் போசாக்கின்மை உயர் மட்டத்தில் காணப்படுகின்றமையை அறிவாரா என்பதையும்;

(ii) நல்லாட்சி அரசாங்கத்தினால் மக்களின் போசாக்கு மட்டத்தை அதிகரிக்கச் செய்வதற்காக வழங்கப்படுகின்ற "போசாக்குப் பொதி" வேலைத்திட்டத்திற்கு இணையாக, பெருந்தோட்டக் கம்பனிகளின் ஊடாகவும் மேற்படி மக்களுக்கு போசாக்குப் பொதியொன்றை பெற்றுக் கொடுத்தல் பொருத்தமாகுமென்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(iii) ஆமெனில், பெருந்தோட்டக் கம்பனிகளின் ஊடாக அத்தகைய வேலைத்திட்டமொன்றை ஆரம்பிக்க அமைச்சு எடுக்கும் நடவடிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3.

194/ '18

கௌரவ (டாக்டர்) நளிந்த ஜயதிஸ்ஸ,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு மாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) 2013 ஆம் ஆண்டு முதல் இன்றுவரை சனாதியபதியவர்கள் மேற்கொண்ட வெளிநாட்டு விஜயங்கள் மற்றும் மேற்படி விஜயங்களின் நோக்கங்கள்;

(ii) ஒவ்வொரு விஜயத்திற்காகவும் பங்கேற்ற ஆட்களின் எண்ணிக்கை மற்றும் அவர்களின் பதவிகள்;

(iii) மேற்படி ஒவ்வொரு விஜயத்திற்காகவும் செலவிட்ட பணத்தொகை;

ஒவ்வோர் ஆண்டுவாரியாகவும் வெவ்வேறாக எவ்வளவு என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4.

242/ '18

கௌரவ (திருமதி) ரோஹினி குமாரி விஜேரத்ன,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு மாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,—(3)

(அ) (i) உமா ஓயா அபிவிருத்திக் கருத்திட்டம் காரணமாக பெருந்தொகையானவர்களின் வீடுகளுக்கு சேதமேற்பட்டுள்ளதென்பதையும்;

(ii) அவ்வாறு வீடுகள் சேதமடைந்த குழுவைச் சேர்ந்தவர்களில் 220 பேருக்கு தமது வீடுகளை கைவிட்டுச் செல்லுமாறு அறிவிக்கப்பட்டுள்ளதென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) அவ்வாறு வீடுகளை கைவிட்டுச் செல்லுமாறு அறிவிக்கப்பட்டுள்ள வீட்டுச் உரிமையாளர்களின் பெயர்களும் முகவரிகளும் யாவை;

(ii) வீடுகளை கைவிட்டுச் செல்ல முன்னர் அவர்களுக்கு வழங்கிய வாக்குறுதிகள் இற்றைவரை ஈடேறவில்லை என்பதை அறிவாரா;

(iii) பாதிக்கப்பட்ட ஏறக்குறைய 220 வீட்டுச் உரிமையாளர்களின் சிக்கலைத் தீர்க்க அமைச்சு மேற்கொள்ளும் நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

5.

342/ '18

கௌரவ இஷாக் ரஹுமான்,— உள்ளக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இப்பலோகம பிரதேச செயலகப் பிரிவிலுள்ள சிறிமாகம எனும் கிராமத்தையும் கலா வாவியையும் இணைப்பதற்கு பாலமொன்றை நிருமாணிக்க திட்டமிடப்பட்டு அதற்கான அடிக்கல் நாட்டப்பட்டு பல வருடங்கள் கடந்துள்ளதென்பதை அவர் அறிவாரா என்பதையும்;

(ii) ஆமெனில், அப்பணியை ஆரம்பிப்பதற்கு எதிர்பார்க்கும் திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

6.

373/ '18

கௌரவ வேலு குமார்,— அரச தொழில் முயற்சிகள், மலைநாட்டு மரபுரிமைகள் மற்றும் கண்டி அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபைக்குச் சொந்தமான றஹதங்கொட தோட்டத்தில் 2002 ஆம் ஆண்டில் தொழில் புரிந்த தோட்டத் தொழிலாளர் களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) 2000 தொடக்கம் 2015 ஆம் ஆண்டு வரை இத்தோட்டத்தில் தொழில் புரிந்து ஓய்வெடுக்கச் செய்யப்பட்ட ஆண் மற்றும் பெண் தோட்டத் தொழிலாளர்களின் எண்ணிக்கை தனித்தனியாக யாது என்பதையும்;

(iii) அவ்வாறு ஓய்வெடுக்கச் செய்யப்பட்ட தொழிலாளர்களில் இன்றளவில் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதி, ஊழியர் சேமலாப நிதி மற்றும் ஓய்வூதியப் பணிக்கொடை செலுத்தப்படாத தொழிலாளர்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(iv) அவ்வாறான தொழிலாளர் ஒவ்வொருவரினதும் பெயர், அங்கத்தவர் இலக்கம், ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதி, ஊழியர் சேமலாப நிதி மற்றும் பணிக்கொடை ஊதியத்தின் நிலுவை தனித்தனியாக யாது என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

7.

381/ '18

கௌரவ எஸ்.எம். மரிக்கார்,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு மாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (4)

(அ) (i) தற்போது 106 ஆண்டுகளைப் பூர்த்திசெய்துள்ள இலங்கை சாரணியர் இயக்கத்தில் 75000 இற்கு மேற்பட்ட சிறுவர்களும் சிறுமியர்களும் சேவை வழங்குகின்றார்கள் என்பதையும்;

(ii) சாரணியர்களின் "வேலை வாரம்" நிகழ்வின் மூலம் வருடாந்தம் ஈட்டிக்கொள்ளப்பட்டு சாரணியர் தலைமையகத்திற்கு கிடைக்கின்ற ரூபா 8 மில்லியன் பணத்தொகை கடந்த ஐந்து வருடங்களில் உரிய நடைமுறைகள் பின்பற்றப்படாமல் செலவு செய்யப்பட்டுள்ளதென்பதையும்;

(iii) தலைமை அலுவலகக் கட்டிடத்தை நிருமாணிக்கும் போது சாரணியர் குழு அங்கத்தவர்களின் அனுமதியின்றி முன்னாள் தலைமை சாரணியர் ஆணையாளர் திரு. நிமல் த சில்வா தனது நட்புக்குரியதொரு கம்பனிக்கு மதியுரைக் கட்டணமாக ரூபா 8 மில்லியன் பணத் தொகையையும் உரியமுறையில் நிருமாணிக்கப்படாத கட்டிடத்திற்கு ரூபா 14 மில்லியனையும் செலுத்தியுள்ளாரென்பதையும்;

(iv) சாரணியர் "வேலை வாரம்" நிகழ்வின் மூலம் ஈட்டிக்கொள்ளப்படுகின்ற பணத்தை பயன்படுத்தி வனப் பேணுகை திணைக்களத்தின் உரிய அனுமதியின்றி நுவரெலியா பிரதேசத்தில் சாரணியர் முகாமொன்றிற்காக நிருமாணிக்கப்பட்ட சீமெந்து கூடங்கள் தடைசெய்யப்பட்டதன் விளைவாக பெருந்தொகையான நிதிசார் நட்டம் எற்பட்டுள்ளதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) தற்போது இந்நிதியினை தவறாகப் பயன்படுத்தியமை சம்பந்தமாக முறையானதொரு விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) அதன் முன்னேற்றம் யாதென்பதையும்;

(iii) இல்லையெனில், எதிர்வரும் காலத்தில் இவ்விடயம் சம்பந்தமாக முழுமையான விசாரணையொன்று நடாத்தப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

8.

427/ '19

கௌரவ கனக ஹேரத்,— ஆரம்ப கைத்தொழில்கள் மற்றும் சமூகவலுவூட்டல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இலங்கையில் மிளகு பயிரிடப்பட்டுள்ள நிலத்தின் பரப்பளவு யாதென்பதையும்;

(ii) 2015 முதல் 2018 ஆம் ஆண்டு வரை நாட்டின் மிளகு விளைச்சல் ஒவ்வொரு வருட அடிப்படையில் தனித்தனியாக எவ்வளவென்பதையும்;

(iii) 2015 முதல் 2018 ஆம் ஆண்டு வரை ஏற்றுமதி செய்துள்ள மிளகின் அளவு ஒவ்வொரு வருட அடிப்படையில் தனித்தனியாக எவ்வளவென்பதையும்;

(iv) இந்த நாட்டில் உற்பத்தி செய்துள்ள மிளகின் அளவிற்கும் அதிகமான அளவு மேற்படி ஆண்டுகளில் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளதா என்பதையும்;

(v) ஆமெனில், இலங்கை மிளகு இறக்குமதி செய்யப்படுகின்றதா என்பதையும்;

(vi) இலங்கை மிளகு இறக்குமதி செய்கின்ற நாடுகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இலங்கைக்கு மிளகு இறக்குமதி செய்வதால் இந்நாட்டு மிளகு செய்கை அழிவடைவதோடு அப்பாவி மிளகு செய்கையாளர்களுக்கு அநீதி ஏற்படுத்தி உயர் மட்ட வர்த்தகர்கள் சிலருக்கு மாத்திரம் நன்மை ஏற்படுகின்றதென்பதையும்;

(ii) மிளகு கைத்தொழிலை மீண்டும் மேம்படுத்த ஏதேனும் வேலைத்திட்டம் செயற்படுத்தப்படுகின்றதா என்பதையும்;

(iii) ஆமெனில், அது யாதென்பதையும்;

(iv) மேற்படி வேலைத்திட்டம் செயற்படுத்தப்படும் திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

9.

437/ '19

கௌரவ ஜயந்த சமரவீர,— அரச தொழில் முயற்சிகள், மலைநாட்டு மரபுரிமைகள் மற்றும் கண்டி அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2018.06.30 ஆம் திகதியில் குத்தகை அடிப்படையில் வெளியாட்களுக்கு வழங்கப்பட்டுள்ள, மக்கள் தோட்ட அபிவிருத்தி சபைக்கு சொந்தமான காணிகளின் பரப்பளவு யாதென்பதையும்;

(ii) அவை வழங்கப்பட்டுள்ள நபர்கள் மற்றும் நிறுவனங்களது பெயர், முகவரி, வழங்கப்பட்டுள்ள குத்தகைக் காலம், குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ள காணியின் அளவு மற்றும் குத்தகைப் பணத்தொகை ஆகியவை வெவ்வேறாக யாதென்பதையும்;

(iii) இக்காணிகளை குத்தகைக்கு வழங்குகையில், பகிரங்க சந்தை விலைகளுக்கு ஏற்ப சொத்துக்கள் மதிப்பீடு செய்யப்பட்டு, இதற்கேற்ப குத்தகைப் பணம் அறவிடப்பட்டுள்ளதா என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) காணியை குத்தகைக்குப் பெற்ற நபர்கள், அவற்றை துணை குத்தகைக்கு வழங்கியிருப்பார்களேயாயின், அக்காணிகள் யாவை என்பதையும்;

(ii) அவ்வாறு துணை குத்தகைக்கு வழங்கியவர்களின் பெயர், முகவரி, குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ள காலம், காணியின் அளவு மற்றும் குத்தகைப் பணத்தொகை வெவ்வேறாக யாதென்பதையும்;

(iii) குத்தகை அறவீடானது இற்றைப்படுத்தப்படாமையாலும் சட்டவிரோத துணை குத்தகைக்கு வழங்கல் காரணமாகவும் கடந்த மூன்று வருட காலப்பகுதியில் சபை இழந்துள்ள நிதித்தொகை யாதென்பதையும்;

(iv) குத்தகை ஒப்பந்தத்தின் பிரகாரம் துணை குத்தகைக்கு வழங்கலுக்கு எதிராக எடுக்கக்கூடிய நடவடிக்கைகள் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

10.

446/ '19

கௌரவ சுசந்த புஞ்சிநிலமே,— பிரதம அமைச்சரும் தேசியக் கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு மாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) சனாதிபதி மற்றும் பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் செயலாளர், திரு. கோட்டாபய ராஜபக்ஷவுக்கு எதிரான சதி தொடர்பில் குற்றஞ்சாட்டப்பட்டுள்ள பிரதி பொலிஸ் மாஅதிபர் திரு நாலக சில்வா, எல்.ரீ.ரீ.ஈ அங்கத்தவர் ஒருவருடனும், புலம்பெயர்ந்துள்ள தமிழர்களுடனும், பாதாள உலகத்தின் பிரபலமான நபர் ஒருவருடனும் தொடர்புகளைப் பேணி வந்துள்ள ஒருவர் என்பதால் சனாதிபதிக்கும், பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் செயலாளருக்கும் வழங்கப்பட்டுள்ள பாதுகாப்பு அதிகரிக்கப்படாமைக்கான காரணம் யாது என்பதையும்;

(ii) சனாதிபதியும், பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் செயலாளரும் நாடளாவிய ரீதியில் மக்கள் சந்திப்புக்கள் உட்பட பல்வேறு நடவடிக்கைகளில் ஈடுபடுவதால், இவர்களின் போக்குவரத்திற்காக குண்டு துளைக்காத வண்டிகள் அல்லது அவ்வாறான வசதிகள் வழங்கப்படாமைக்கான காரணம் யாது என்பதையும்;

(iii) இவ்விடயம் தொடர்பில் தகவல்களை வெளிப்படுத்திய நாமல் குமார என்பவர் கூறுவதுபோல், சம்பவத்துடன் தொடர்புடைய தொழில்நுட்பச் சான்றுகளை 05 நிமிட குறுகிய காலத்தினுள் அழித்துவிட முடியுமென்பதால், விசாரணைகள் நடைபெறுகின்ற நிலையிலும் சம்பந்தப்பட்ட பிரதிப் பொலிஸ் மாஅதிபரை சேவையில் வைத்திருப்பதற்கு பொலிஸ் மாஅதிபருக்கு இருக்கின்ற தேவை யாது என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

11.

453/ '19

கௌரவ ஆனந்த அலுத்கமகே,— ஆரம்ப கைத்தொழில்கள் மற்றும் சமூகவலுவூட்டல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) வயது முதிர்ந்த ஆட்களுக்கான தேசிய பேரவை மற்றும் வயது முதிர்ந்தோர் தேசிய செயலகத்தின் கடமைகள் யாவையென்பதையும்;

(ii) 2017 ஆம் ஆண்டில் பொதுமக்கள் நலநோம்புகைக்காக மேற்கொள்ளப்பட்டுள்ள வேலைத்திட்டங்கள் யாவையென்பதையும்;

(iii) மேற்படி வேலைத்திட்டத்திற்காக செலவிடப்பட்ட பணத்தொகை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) தற்போது இலங்கையின் முதியோர் சனத்தொகை அதிகரிக்கின்றது என்பதையும்;

(ii) முதியோர் சனத்தொகையில் பெரும்பாலானவர்களுக்கு வாழ்வதற்கு எத்தகைய வருமானமும் இல்லை என்பதையும்;

(iii) இவர்களுக்கு வருமானம் பெறும் வழிமுறைகள் தொடர்பான அறிவு போதுமானதாக இல்லை என்பதையும்;

(iv) பிள்ளைகள் அவர்களை பராமரிகாமல் கைவிடுவதன் காரணமாக அவர்கள் அநாதரவாகியுள்ளனர் என்பதையும்,

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(இ) ஆமெனில், அதற்கான தீர்வுகள் யாவையென்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

12.

528/ '19

கௌரவ பிமல் ரத்நாயக்க,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு மாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு கல்வி நடவடிக்கைகளுக்காக இலங்கையர் களுக்கு சனாதிபதி நிதியத்தின் மூலம் முழுமையான அல்லது பகுதியளவு புலமைப்பரிசில் வழங்கும் வேலைத்திட்டமொன்று காணப்படுகின்றதா என்பதையும்;

(ii) ஆமெனின், மேற்படி வேலைத்திட்டத்திற்கு அமைவாக இதற்காக தகைமை பெற்றவர்கள் தெரிவு செய்யப்படும் அடிப்படை மற்றும் முறையியல் யாதென்பதையும்;

(iii) க.பொ.த. (உயர் தரத்தில்) அதிகூடிய புள்ளிகளை பெற்றுக்கொள்ளும் மாணவர்களுக்கு புலமைப்பரிசில் வழங்கும் முறையியலொன்று காணப்படுகின்றதா என்பதையும்;

(iv) பட்டப்பின் படிப்பு கல்விக்காக பட்டதாரிகளுக்கு புலமைப்பரிசில் வழங்கும் முறையியலொன்று காணப்படுகின்றதா என்பதையும்;

(v) மேற்படி (iii) மற்றும் (iv) தவிர வேறு உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு புலமைப் பரிசில்களை பெற்றுக்கொடுக்கும் முறையியலொன்று காணப்படுகின்றதா என்பதையும்;

(vi) ஆமெனின், மேற்படி முறையியல் யாதென்பதையும்;

(vii) 2005 தொடக்கம் 2017 ஆம் ஆண்டு வரை மேற்படி (iii) மற்றும் (iv) இல் குறிப்பிடப்பட்ட முறையியல்களுக்கு புறம்பாக, உள்நாட்டு அல்லது வெளிநாட்டு புலமைப்பரிசில்களை பெற்றுக்கொண்டவர்களின் பெயர், நிதித் தொகை, நிறுவனம் மற்றும் வெளிநாடெனில், அந்நாட்டின் பெயர் ஆண்டுவாரியாக தனித்தனியே யாதென்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

13.

565/ '19

கௌரவ துஷார இந்துனில் அமரசேன,— நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) 'கொவிசெத' லொத்தர்ச் சீட்டு ஆரம்பிக்கப்பட்ட திகதி யாது என்பதையும்;

(ii) அது ஆரம்பிக்கப்பட்டதன் நோக்கங்கள் யாவையென்பதையும்;

(iii) மேற்படி லொத்தர் சீட்டு ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து இன்று வரை அதனைச் சந்தைப்படுத்தி ஆண்டுதோறும் ஈட்டிய வருமானம் வெவ்வேறாக யாது எபதையும்;

(iv) இவ்வருமானத்தில் பரிசாக வழங்கப்பட்ட தொகை வருடாந்தம் எவ்வளவு என்பதையும்;

(v) விவசாய மக்களின் நலனோம்புகைக்கு செலவு செய்யப்பட்ட தொகை யாதென்பதையும்;

(vi) எதிர் காலத்தில் விவசாயிகளின் நலனுக்காக அதிகமான தொகையை செலவிட அமைச்சு எடுக்கவிருக்கும் நடவடிக்கை யாது என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

14.

630/ '18

கௌரவ உதய பிரபாத் கம்மன்பில,— வீடமைப்பு, நிர்மாணத்துறை மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2018 செப்டெம்பர் 30 ஆம் திகதிக்கு தேசிய சுவடிகூடத் திணைக்களத்தில் வெற்றிடமாகியுள்ள பணிப்பாளர் மற்றும் உதவி பணிப்பாளர் பதவிகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு பதவிக்கும் வெற்றிடம் ஏற்பட்ட திகதி யாதென்பதையும்;

(iii) மேற்படி வெற்றிடங்களை நிரப்ப இது வரை நடவடிக்கை எடுக்காமைக்கான காரணங்கள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

15.

1052/ '19

கௌரவ சனத் நிசாந்த பெரேரா,— உள்ளக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்தில் சேவையில் ஈடுபட்டுள்ள இலங்கை நிருவாகச் சேவைக்குரிய உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை யாது;

(ii) திணைக்களத்தின் பதவிகளில் தற்போது வெற்றிடம் நிலவுமாயின் மேற்படி வெற்றிடங்களின் எண்ணிக்கை யாது;

(iii) குடிவரவு - குடியகல்வு கட்டுப்பாட்டாளர் நாயகம் பதவி இலங்கை நிருவாகச் சேவையின் எத்தரத்திற்குரிய பதவியாகும் ;

(iv) மேற்படி பதவி இன்றளவில் வெற்றிடமாகி இருப்பின் வெற்றிடமாகிய திகதி யாது;

(v) நாட்டில் நிலவுகின்ற நிகழ்கால பாதுகாப்பு நிலைமைக்கிணங்க இப்பதவியை நிரப்ப நடவடிக்கை மேற்கொள்ளாமையினால் நாட்டின் பாதுகாப்பு நிலைமைமீது இது நேரடியான தாக்கத்தை ஏற்படுத்துகின்றதென்பதை ஏற்றுக்கொள்கிறாரா;

(vi) ஆமெனில் மேற்படி வெற்றிடம் நிரப்பப்படும் திகதி யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல் ஏன்?

---

## பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

* 1.

ஸ்ரம வாசனா நிதியம் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 2.

சம்பளச் சபைகள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 3.

அமைச்சரவை அந்தஸ்த்தற்ற தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சர்,— தொழிற்சாலைகள் கட்டளைச்சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 1),— (128 ஆம் அத்தியாயமான) தொழிற்சாலைகள் கட்டளைச்சட்டத்தின் 3 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் அக்கட்டளைச்சட்டத்தின் 105 ஆம் பிரிவின் கீழ், தொழிற்சாலைகளைப் பதிவு செய்தலும் மற்றும் தொழிற்சாலைக் கட்டடங்களை அங்கீகரித்தலும் தொடர்பில் தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சரால் ஆக்கப்பட்டதும் 2019.08.20 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக .

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 4.

அமைச்சரவை அந்தஸ்த்தற்ற தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சர்,— தொழிற்சாலைகள் கட்டளைச்சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 2),— (128 ஆம் அத்தியாயமான) தொழிற்சாலைகள் கட்டளைச்சட்டத்தின் 34 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் அக்கட்டளைச்சட்டத்தின் 105 ஆம் பிரிவின் கீழ், நீராவிக் கொதிகலன்களைப் பதிவு செய்தல் தொடர்பில் தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சரால் ஆக்கப்பட்டதும் 2019.08.20 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 5.

அமைச்சரவை அந்தஸ்த்தற்ற தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சர்,— தொழிற்சாலைகள் கட்டளைச்சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 3),— (128 ஆம் அத்தியாயமான) தொழிற்சாலைகள் கட்டளைச்சட்டத்தின் 34, 35, 36, 36அ, 38 மற்றும் 38அ என்னும் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் அக்கட்டளைச்சட்டத்தின் 105 ஆம் பிரிவின் கீழ், நீராவிக் கொதிகலன்கள் மற்றும் வேறு அழுத்தக் கலன்களை பரிசோதனை செய்வதற்கான சான்றிதழ்களை வழங்குதல் தொடர்பில் தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சரால் ஆக்கப்பட்டதும் 2019.08.20 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக .

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 6.

அமைச்சரவை அந்தஸ்த்தற்ற தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சர்,— தொழிற்சாலைகள் கட்டளைச்சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 4),— (128 ஆம் அத்தியாயமான) தொழிற்சாலைகள் கட்டளைச்சட்டத்தின் 58அ ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் அக்கட்டளைச்சட்டத்தின் 105 ஆம் பிரிவின் கீழ், மிகையான இரைச்சலிலிருந்து வேலையாளர்களைப் பாதுகாத்தல் தொடர்பில் தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சரால் ஆக்கப்பட்டதும் 2019.08.20 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக .

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 7.

அமைச்சரவை அந்தஸ்த்தற்ற தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சர்,— தொழிற்சாலைகள் கட்டளைச்சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 5),— (128 ஆம் அத்தியாயமான) தொழிற்சாலைகள் கட்டளைச்சட்டத்தின் 13 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் அக்கட்டளைச்சட்டத்தின் 105 ஆம் பிரிவின் கீழ், பொது வெளிச்சமிடுதல் நியமம் தொடர்பில் தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சரால் ஆக்கப்பட்டதும் 2019.08.20 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக .

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 8.

வீடமைப்பு, நிர்மாணத்துறை மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர்,— நிர்மாணத் தொழில் அபிவிருத்திச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல.1),— 2014 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க நிர்மாணத் தொழில் அபிவிருத்திச் சட்டத்தின் 52(2) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 58 ஆம் பிரிவின் கீழ் தீர்ப்பாளர்களை பதிவுசெய்தல் தொடர்பில் வீடமைப்பு, நிர்மாணத்துறை மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2019 மார்ச் 08 ஆம் திகதிய 2113/63 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2019.08.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

* 9.

வீடமைப்பு, நிர்மாணத்துறை மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர்,— நிர்மாணத் தொழில் அபிவிருத்திச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல.2),— 2014 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க நிர்மாணத் தொழில் அபிவிருத்திச் சட்டத்தின் 53(2) மற்றும் 54(1)(அ) ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 58 ஆம் பிரிவின் கீழ் மேன்முறையீட்டு நடவடிக்கைமுறை தொடர்பில் வீடமைப்பு, நிர்மாணத்துறை மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2019 மார்ச் 28 ஆம் திகதிய 2116/47 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2019.08.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப் பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

* 10.

வீடமைப்பு, நிர்மாணத்துறை மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர்,— நிர்மாணத் தொழில் அபிவிருத்திச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல.3),— 2014 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க நிர்மாணத் தொழில் அபிவிருத்திச் சட்டத்தின் 55(2) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 58 ஆம் பிரிவின் கீழ் தகவற் செயலகம் தொடர்பில் வீடமைப்பு, நிர்மாணத்துறை மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2019 மார்ச் 28 ஆம் திகதிய 2116/48 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2019.08.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

* 11.

மக்கள் வங்கி (திருத்தச்) சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (2019 ஆகஸ்ட் 22) [1].

* 12.

வணிகக் கப்பற்றொழில் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 13.

பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு மாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சரும்,— அத்தியாவசிய பொதுமக்கள் சேவை சட்டத்தின் கீழ் கட்டளை,— 1979 ஆம் ஆண்டின் 61 ஆம் இலக்க, அத்தியாவசிய பொதுமக்கள் சேவை சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் பயணிகள் அல்லது பண்டங்களுக்கான அனைத்துப் பொதுப் போக்குவரத்துச் சேவைகளும் அத்தியாவசிய சேவைகள் என பிரகடனப்படுத்தல் தொடர்பில் சனாதிபதி அவர்களால் பிரகடனப்படுத்தப்பட்டு, 2019 ஆகஸ்ட் 27 ஆம் திகதிய 2138/10 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2019.09.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

* 14.

இலங்கை றுஹுணு பொருளாதார அபிவிருத்திக் கூட்டுத்தபானம் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 15.

நிதி அமைச்சர்,— நிதிச் சட்டத்தின் கீழ் கட்டளை,— 2004 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் 26 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 22 ஆம் பிரிவின் கீழ் சர்வதேச தொலைத்தொடர்பு இயக்குநர் வரி தொடர்பில் நிதி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2019 மே 14 ஆம் திகதிய 2123/19 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2019.07.25 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 16.

நிதி அமைச்சர்,— துறைமுக மற்றும் விமான நிலைய அபிவிருத்தி அறவீட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளை,— 2011 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க, துறைமுக மற்றும் விமான நிலைய அபிவிருத்தி அறவீட்டுச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ், துறைமுக மற்றும் விமான நிலைய அபிவிருத்தி அறவீடு தொடர்பாக நிதி அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2019 மாச்சு 5 ஆம் திகதிய 2113/10 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2019.07.12 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 17.

நிதி அமைச்சர்,— உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் கட்டளை,— 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் உற்பத்தி வரி தொடர்பாக நிதி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2019 ஏப்பிறல் 04 ஆம் திகதிய 2117/48 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2019.07.31 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 18.

நிதி அமைச்சர்,— விசேட வியாபாரப் பண்டங்கள் அறவீட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல.1),— 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்டங்கள் அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் நிதி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2019 மே 07 ஆம் திகதிய 2122/4 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2019.09.03 ஆம் திகதி சமர்ப்பிக்கப் பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 19.

நிதி அமைச்சர்,— விசேட வியாபாரப் பண்டங்கள் அறவீட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 2),— 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்டங்கள் அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் நிதி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2019 மே 21 ஆம் திகதிய 2124/2 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2019.09.03 ஆம் திகதி சமர்ப்பிக்கப் பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 20.

நிதி அமைச்சர்,— விசேட வியாபாரப் பண்டங்கள் அறவீட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 3),— 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்டங்கள் அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் நிதி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2019 மே 21 ஆம் திகதிய 2124/4 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2019.09.03 ஆம் திகதி சமர்ப்பிக்கப் பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 21.

நிதி அமைச்சர்,— விசேட வியாபாரப் பண்டங்கள் அறவீட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 4),— 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்டங்கள் அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் நிதி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2019 யூலை 03 ஆம் திகதிய 2130/20 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2019.09.03 ஆம் திகதி சமர்ப்பிக்கப் பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 22.

நிதி அமைச்சர்,— விசேட வியாபாரப் பண்டங்கள் அறவீட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 5),— 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்டங்கள் அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் நிதி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2019 யூலை 10 ஆம் திகதிய 2131/30 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2019.09.03 ஆம் திகதி சமர்ப்பிக்கப் பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 23.

நிதி அமைச்சர்,— விசேட வியாபாரப் பண்டங்கள் அறவீட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 6),— 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்டங்கள் அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் பதில் நிதி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2019 யூலை 18 ஆம் திகதிய 2132/13 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2019.09.03 ஆம் திகதி சமர்ப்பிக்கப் பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 24.

நிதி அமைச்சர்,— சுங்கக் கட்டளைச் சட்டத்தின் கீழ் தீர்மானம்,— (235 ஆம் அத்தியாயமான) சுங்கக் கட்டளைச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் கீழான இறக்குமதி தீர்வை வரி தொடர்பில், 2019.09.03 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட தீர்மானம் அங்கீகரிக்கப்படுமாக.

(2019 யூன் 11 ஆம் திகதிய 2127/13 ஆம் இலக்க விசேட வர்த்தமானிப் பத்திரிகை)

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 25.

நிதி அமைச்சர்,— மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் கீழ் விதிகள்,— மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் (52 ஆம் அத்தியாயமான) 8 ஆம் மற்றும் 30 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 32 ஆம் பிரிவின் கீழ் ஒட்டுத்துண்டு மற்றும் ஒட்டுத்துண்டு முகாமை முறைமை தொடர்பில் நிதி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2019 யூன் 20 ஆம் திகதிய 2128/30 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2019.09.04 ஆம் திகதி சமர்ப்பிக்கப் பட்டதுமான விதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(மதுவரி அறிவித்தல் இலக்கம் 04/2019.)

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 26.

இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (2019 செப்டம்பர் 05),— "1979 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் 29(2)(ஈ) ஆம் பிரிவின் கீழ் ஏற்றுமதியாளர்களைப் பதிவு செய்வதற்கான திட்ட ஒழுங்குவிதிகள் தொடர்பில் அபிவிருத்தி உபாயமுறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2019 ஏப்பிரல் 11 ஆம் திகதிய 2118/60 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2019.08.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக" எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.

* 27.

கைத்தொழில், வாணிப அலுவல்கள், நீண்டகாலமாக இடம்பெயர்ந்த நபர்களின் மீள்குடியேற்றம், கூட்டுறவுத்துறை அபிவிருத்தி, தொழில் பயிற்சி மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சர்,— பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதி,— 1987 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க, பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் 36 ஆம் பிரிவின் கீழ், 1988 யூன் 2 ஆம் திகதிய 508/7 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2012 ஓகஸ்ட் 30 ஆம் திகதிய 1773/36 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை மூலம் இறுதியாகத் திருத்தப்பட்டதுமான ஒழுங்குவிதி, உடனடியாக வலுப்பெறும் வகையில் அதிமேதகு சனாதிபதி அவர்களின் ஒப்புதலுடன் கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2018 சனவரி 24 ஆம் திகதிய 2055/18 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2019.07.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 28.

பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு மாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழ் தீர்மானம் (இல.1),— இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின்108 (1) உறுப்புரையின் பிரகாரம் கௌரவ உச்ச நீதிமன்ற மற்றும் மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்களுக்குச் செலுத்தும் சம்பளம் பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்படுவதோடு, 108(2) ஆம் உறுப்புரையின் மூலம் அந்த நீதிபதிகளை நியமித்த பின்னர் அவர்களுக்குச் செலுத்தவேண்டிய சம்பளம் மற்றும் ஓய்வூதிய உரிமைகளைக் குறைக்கக்கூடாதென ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதனாலும்;

ஓய்வூதியப் பிரமாணக் குறிப்பின் 25 ஆம் பிரிவு திருத்தப்பட்ட இல 1190/18 ஆம் இலக்க, 2001.06.28 ஆம் திகதிய அதி விசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் உச்ச நீதிமன்ற நீதியரசர் ஒருவர் அல்லது மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர் ஒருவர் ஓய்வுபெறும் போது பெற்றுக்கொண்ட சம்பளத்தின் 90% ஐ ஓய்வூதியமாகப் பெற்றுக்கொள்வதற்கு உரிமையுடைவர் ஆவாரென்பதனாலும்;

உயர் நீதிமன்ற நீதியரசர்களுக்கு தனது விருப்பத்தின் பேரில் அவர்களுக்குரிய மாதாந்த ஓய்வூதியத்தைப் போன்ற 24 மடங்கு தொகையை ஓய்வூதியப் பணிக்கொடையாகப் பெற்றுக்கொள்ள முடியும். எனினும், நீண்ட காலமாக இந்தப் பணிக்கொடை ஓய்வூதியத்திலிருந்து அறவிடப்படாமல் முழுமையான ஓய்வூதியத் தொகையும் மாதாந்தம் செலுத்தப்பட்டுள்ளது. சனாதிபதி அவர்களால் 2019 யூன் 24 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவை விஞ்ஞாபனத்திற்கு அமைவாக 2019 யூலை 19 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தை அடிப்படையாகக் கொண்டு இந்தப் பணிக்கொடையை செலுத்துவதற்கு விருப்பம் தெரிவிப்பதன் மீது அந்தப் பணிக்கொடையை மீண்டும் அரசாங்கத்திற்கு அறவிட்டுக்கொள்ளும் முறைக்கு இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளதாக பொருள்கோடல் செய்து, முற்பணத் தொகையாக உச்ச நீதிமன்ற நீதியரசர் ஒருவருக்கு வழங்கப்பட்டுள்ள பணிக்கொடையை 10 வருடங்களுக்குள் அதாவது, 120 மாதாந்த தவணைகளில் மீண்டும் அறவிட்டுக்கொள்வது அரசியலமைப்பின் 108(2) ஆம் உறுப்புரையை மீறியதாக அமையாதென்பதனாலும்;

உச்ச நீதிமன்றத்தின் மற்றும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் நீதியரசர்களின் ஓய்வூதியக் குறைப்பு அல்லது அதற்கு இடைநேர் விளைவான விடயங்கள் மீது தாக்கம் செலுத்தும் சகல விடயங்கள் தொடர்பிலும் நடவடிக்கை எடுக்கும் அதிகாரம் அரசியலமைப்பினால் பாராளுமன்றத்திற்கு வழங்கப்பட்டிருப்பதை சட்டத்துறை தலைமையதிபதி சுட்டிக்காட்டியுள்ளதாதலாலும்;

அவ்வாறே, அண்மையில் நீதிமன்றத் துறைக்கு உயர் சம்பள அதிகரிப்பு வழங்கப்பட்டிருப்பதும் கருத்திற்கொள்ளப்பட்டுள்ளதனாலும்;

அதற்கிணங்க, உச்ச நீதிமன்ற நீதியரசர்களின் ஓய்வூதியப் பணிக்கொடையை அமுலிலுள்ள சட்டத்திற்கு அமைவாக 120 மாதங்களில் மீண்டும் அறவிடப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றும் தீர்மானிக்கின்றது.

* 29.

பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு மாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழ் தீர்மானம் (இல.2),— இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 153 ஆம் உறுப்புரையின் பிரகாரம், சனாதிபதி அவர்களால் அரசியலமைப்புப் பேரவையின் அனுமதியின் கீழ் 2019.04.26 ஆம் திகதியிலிருந்து திரு.டபிள்யூ.பி.சி. விக்கிரமரத்ன அவர்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதியாக நியமிக்கப்பட்டுள்ளதாதலாலும்;

அவரது சம்பளம் 153(2) ஆம் உறுப்புரையின் பிரகாரம் பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்படுதல் வேண்டும் என்பதோடு, திரட்டு நிதியத்தில் பொறுப்பிக்கப்படுதலும் வேண்டுமென்பதனாலும்;

தேசிய சம்பள மற்றும் பதவியணி ஆணைக்குழுவின் பரிந்துரைக்கு அமைய சனாதிபதி அவர்களால் 2019 யூன் 24 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவை விஞ்ஞாபனத்திற்கான 2019 யூலை 19 ஆம் திகதிய அமைச்சரவை தீர்மானத்திற்கு அமைய கணக்காய்வாளர் தலைமை அதிபதி திரு.டபிள்யூ.பி.சி.விக்கிரமரத்ன அவர்களுக்கு 2019.04.26 ஆம் திகதி முதல் அரச நிர்வாக சுற்றறிக்கை 03/2016 இன் SL-4 சம்பள அளவுத்திட்டத்தின் 7 ஆவது படிமுறையில் அமர்த்தி சம்பளம் வழங்குவதற்கும் அரசாங்க நிர்வாக சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு அமைய பதவிக்குரிய ஏனைய கொடுப்பனவுகளை செலுத்துவதற்கும் அந்த சம்பள அளவுத் திட்டத்திற்கு அமைய வருடாந்த சம்பள ஏற்றத்தை செலுத்துவதற்கும் அனுமதி வழங்கப்பட்டுள்ளதாதலாலும்;

அதற்கிணங்க, இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 153(2) ஆம் உறுப்புரையின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதி திரு.டபிள்யூ.பி.சி.விக்கிரமரத்ன அவர்களுக்கு திரட்டு நிதியத்தில் பொறுப்பிக்கப்படும் வகையில் மேற்குறிப்பிடப்பட்ட மாதாந்த சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளை செலுத்த வேண்டுமென இப்பாராளுமன்றும் தீர்மானிக்கின்றது.

* 30.

பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு மாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சருமானவர்,— இழப்புக்கான எதிரீடுகள் பற்றிய அலுவலகச் சட்டத்தின் கீழ் தீர்மானம்,— 2018 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க, இழப்புக்கான எதிரீடுகள் பற்றிய அலுவலகச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் அரசியலமைப்புப் பேரவையின் விதப்புரையின் அடிப்படையில் நியமிக்கப்பட்டிருக்கின்ற இழப்புக்கான எதிரீடுகள் பற்றிய அலுவலகத்தின் தவிசாளர் உள்ளடங்கிய ஐந்து உறுப்பினர்களுக்காக சம்பளம் வழங்கல், அச்சட்டத்தின் 17 ஆம் வாசகத்தின் பிரகாரம் பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்பட வேண்டுமென்பதோடு, அது திரட்டு நிதியத்தின் மீது பொறுப்பிக்கப்பட வேண்டியதொன்றாகுமென்பதாலும்;

நிலைபெயர்கால நீதிச் செயலுக்காக ஒத்துழைப்பு வழங்குவதற்காக அரசினால் நிறுவப்பட்ட இந்நிறுவனம், நல்லிணக்கத்தை இலக்காகக் கொண்டு, மோதல்கள் காரணமாக இன்னலுற்ற ஆட்களுக்கு, தனியாள் மற்றும் கூட்டுக் குழுக்களுக்கு இழப்பீடுகள் வழங்குவதற்காக இழப்பீடு தொடர்பாக கொள்கைகளை ஒழுங்கு முறைப்படி தயாரித்து அமைச்சரவைக்கு விதப்புரை மேற்கொள்ளல், காணாமல் போன ஆட்கள் தொடர்பான அலுவலகத்தினால் வழங்கப்படும் விதப்புரைகளை நடைமுறைப்படுத்தல், இழப்பீட்டுக் கொள்கைகளை அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்டதன் பின்னர் அமுல்படுத்தல், இன்னலுற்ற ஆட்களுக்கு எவ்வித பாரபட்சமுமின்றி அவர்களின் மறுமலர்ச்சி, புனர்வாழ்வு, நிர்வாகம் உள்ளடங்கிய ஏனைய நிவாரணங்களைப் பெற்றுக் கொடுத்தல், நலன்புரிச் சேவைகளை வழங்கல் போன்றவை மேற்கொள்ள அதிகாரமளிக்கப்பட்டுள்ளதாலும்;

தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு மாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் அலுவல்கள் பற்றிய விடயங்களுக்குப் பொறுப்பு அமைச்சரான பிரதமரினால் 2019 மே 16 ஆம் திகதி அமைச்சரவை விஞ்ஞாபனம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதோடு, 2019 யூன் 04 ஆம் திகதி இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் இழப்புக்கான எதிரீடுகள் பற்றிய அலுவலகத்தின் தவிசாளருக்கும் ஏனைய உறுப்பினர்களுக்கும் 2019 ஏப்ரல் 01 ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வருமாறு கீழ்க் குறிப்பிட்டுள்ளதன் பிரகாரம் சம்பளம் வழங்க தீர்மானிக்கப்பட்டதாலும்;

(அ) இவ்வலுவலகத்தின் தவிசாளருக்கு ரூபா 135,000.00 மாதாந்த கொடுப்பனவும் ரூபா 10,000.00 மாதாந்த தொலைபேசிக் கட்டணத்துடன் மாதத்திற்கு வாகனப் பாவனைக்காக 225 லீட்டர் எரிபொருள் உட்பட போக்குவரத்திற்காக உத்தியோகபூர்வ வாகனமொன்று வழங்குதல்;

(ஆ) இவ்வலுவலகத்தின் ஏனைய உறுப்பினர்களுக்கு ரூபா 90,000.00 மாதாந்த கொடுப்பனவும் ரூபா 8,000.00 தொலைபேசிக் கட்டணத்துடன், ஏனைய உறுப்பினர்களது வீட்டிலிருந்த அலுவலகத்திற்குள்ள தூரத்தினடிப்படையில் 350 கி.மீ வரை 25,000.00 ரூபாவையும் 350 கி.மீ. அல்லது அதற்கு மேற்பட்ட தூரத்திற்கு 50,000.00 ரூபாவையும் மாதாந்த போக்குவரத்து கொடுப்பனவாக வழங்குல்.

அதன்பிரகாரம், 2018 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க, இழப்புக்கான எதிரீடுகள் பற்றிய அலுவலகச் சட்டத்தின் 17 ஆம் வாசகத்தின் பிரகாரம், இவ்வலுவலகத்தின் தவிசாளர் மற்றும் ஏனைய உறுப்பினர்களுக்கான திரட்டு நிதியின் மீது பொறுப்பிக்கப்படவேண்டிய மேற்படி சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளை 2019 ஏப்ரல் 01 ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வருமாறு செலுத்துவதற்கு இப்பாராளுமன்றம் தீர்மானம் நிறைவேற்றுமாக.

* 31.

கொழும்பு பங்குத் தொகுதிப் பரிவர்த்தனையை பரஸ்பரமற்றமயமாக்கல் சட்டமூலம் — குழு ஆய்நிலை.

* 32.

இலங்கை வர்த்தக மத்தியஸ்த நிலைய (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 33.

பிணையங்கள் பரிவர்த்தனை சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 34.

காலவிதிப்பு (விசேட ஏற்பாடுகள்) (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 35.

பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 36.

குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 37.

மதுவரி (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 38.

சேர்பெறுமதி வரி (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 39.

நாட்டைக் கட்டியெழுப்புதல் வரி (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 40.

நிதி சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 41.

குடிவருவோர், குடியகல்வோர் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 42.

பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர்,— களுபோவிட்டியான தேயிலைத் தொழிற்சாலை லிமிரெட்டின் ஆண்டறிக்கை மற்றும் கணக்குகள் (2015/2016),— 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் 2018.08.08 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2016.03.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்துக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் உள்ளடங்கலான, களுபோவிட்டியான தேயிலைத் தொழிற்சாலை லிமிரெட்டின் ஆண்டறிக்கை மற்றும் கணக்குகள் அங்கீகரிக்கப்படுமாக.

(கமத்தொழில் மற்றும் காணி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2019.07.11 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

* 43.

பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர்,— தேசிய பெருந்தோட்டக் கைத்தொழில் முகாமைத்துவ நிறுவனத்தின் ஆண்டறிக்கை மற்றும் கணக்குகள் (2016),— 1979 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க, தேசிய பெருந்தோட்டக் கைத்தொழில் முகாமைத்துவச் சட்டத்தின் 23 பிரிவின் கீழ், 2018.08.08 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2016.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்துக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் உள்ளடங்கலான தேசிய பெருந்தோட்டக் கைத்தொழில் முகாமைத்துவ நிறுவனத்தின் ஆண்டறிக்கை மற்றும் கணக்குகள் அங்கீகரிக்கப்படுமாக.

(கமத்தொழில் மற்றும் காணி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2019.05.24 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

* 44.

பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர்,— தேயிலை சிறு பற்றுநிலங்கள் அபிவிருத்தி அதிகாரசபையின் ஆண்டறிக்கை மற்றும் கணக்குகள் (2015),— தேசிய அரசுப் பேரவையின் 1975 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க தேயிலை சிறு பற்றுநிலங்கள் அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டத்தின் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் II பகுதியின் 14-1A ஆம் பிரிவிற்கமைய, 2018.05.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2015.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்துக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் உள்ளடங்கலான, தேயிலை சிறு பற்றுநிலங்கள் அபிவிருத்தி அதிகாரசபையின் ஆண்டறிக்கை மற்றும் கணக்குகள் அங்கீகரிக்கப்படுமாக.

(கமத்தொழில் மற்றும் காணி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2019.05.24 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

* 45.

பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர்,— தேயிலை சிறு பற்றுநிலங்கள் அபிவிருத்தி அதிகாரசபையின் ஆண்டறிக்கை மற்றும் கணக்குகள் (2016),— தேசிய அரசுப் பேரவையின் 1975 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க சிறு பற்றுநிலங்கள் அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டத்தின் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் II பகுதியின் 14-1A ஆம் பிரிவிற்கமைய, 2018.09.19 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2016.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்துக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் உள்ளடங்கலான, தேயிலை சிறு பற்றுநிலங்கள் அபிவிருத்தி அதிகாரசபையின் ஆண்டறிக்கை மற்றும் கணக்குகள் அங்கீகரிக்கப்படுமாக.

(கமத்தொழில் மற்றும் காணி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2019.05.24 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

* 46.

அபிவிருத்தி உபாய முறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சர்,— இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபையின் வருடாந்த அறிக்கை மற்றும் கணக்குகள் (2016),— 1979 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபைச் சட்டத்தின் 16 ஆம் பிரிவின் பிரகாரம், 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் II ஆம் பிரிவிற்கமைய, 2019.06.20 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2016.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்துக்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புகள் உள்ளடங்கலான இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபையின் வருடாந்த அறிக்கை மற்றும் கணக்குகள் அங்கீகரிக்கப்படுமாக.

(பொருளாதார அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2019.07.23 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

* 47.

துறைமுகங்கள், கப்பற்துறை மற்றும் தெற்கு அபிவிருத்தி அமைச்சர்,— இலங்கை துறைமுக அதிகாரசபையின் வருடாந்த அறிக்கை மற்றும் கணக்குகள் (2015),— 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) ஆம் பிரிவிற்கமைய, 2018.01.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2015.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்துக்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புகள் உள்ளடங்கலான, இலங்கை துறைமுக அதிகாரசபையின் வருடாந்த அறிக்கை மற்றும் கணக்குகள் அங்கீகரிக்கப்படுமாக.

(போக்குவரத்து மற்றும் தொலைத்தொடர்பு பற்றிய துறைசார் மேற்பார்வைக் பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2019.06.07 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

* 48.

துறைமுகங்கள், கப்பற்துறை மற்றும் தெற்கு அபிவிருத்தி அமைச்சர்,— இலங்கை துறைமுக அதிகாரசபையின் வருடாந்த அறிக்கை மற்றும் கணக்குகள் (2016),— 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) ஆம் பிரிவிற்கமைய, 2018.07.19 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2016.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்துக்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புகள் உள்ளடங்கலான, இலங்கை துறைமுக அதிகாரசபையின் வருடாந்த அறிக்கை மற்றும் கணக்குகள் அங்கீகரிக்கப்படுமாக.

(போக்குவரத்து மற்றும் தொலைத்தொடர்பு பற்றிய துறைசார் மேற்பார்வைக் பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2019.06.07 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

* 49.

கமத்தொழில், கிராமியப் பொருளாதார அலுவல்கள், நீர்ப்பாசனம், கடற்றொழில் மற்றும் நீரக வளமூலங்கள் அபிவிருத்தி அமைச்சர்,— இலங்கை கமத்தொழில் ஆய்வுக் கொள்கைக்கான சபையின் ஆண்டறிக்கையும் கணக்குகளும் (2016),— 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(2)(C) ஆம் பிரிவிற்கமைய, 2018.06.20 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2016.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்துக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புகள் உள்ளடங்கலான இலங்கை கமத்தொழில் ஆய்வுக் கொள்கைக்கான சபையின் ஆண்டறிக்கையும் கணக்குகளும் அங்கீகரிக்கப்படுமாக.

(கமத்தொழில் மற்றும் காணிகள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2019.07.11 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

* 50.

கமத்தொழில், கிராமியப் பொருளாதார அலுவல்கள், நீர்ப்பாசனம், கடற்றொழில் மற்றும் நீரக வளமூலங்கள் அபிவிருத்தி அமைச்சர்,— வரையறுக்கப்பட்ட இலங்கை பொஸ்பேட்டு லிமிடட்டின் ஆண்டறிக்கையும் கணக்குகளும் (2016/2017),— 2003 யூன் 02 ஆம் திகதிய அரச தொழில்முயற்சிகள் திணைக்களத்தின் சுற்றறிக்கை இல. PED 12, அத்தியாயம் 6.5.3 இன் பிரகாரம், 2018.06.21 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2017.03.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்துக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புகள் உள்ளடங்கலான வரையறுக்கப்பட்ட இலங்கை பொஸ்பேட்டு லிமிடட்டின் ஆண்டறிக்கையும் கணக்குகளும் அங்கீகரிக்கப்படுமாக.

(கமத்தொழில் மற்றும் காணிகள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2019.01.25 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

* 51.

கமத்தொழில், கிராமியப் பொருளாதார அலுவல்கள், நீர்ப்பாசனம், கடற்றொழில் மற்றும் நீரக வளமூலங்கள் அபிவிருத்தி அமைச்சர்,— அறுவடைக்குப் பிந்திய தொழில்நுட்ப நிறுவகத்தின் ஆண்டறிக்கையும் கணக்குகளும் (2015),— 1972 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க அரச விவசாயக் கூட்டுத்தாபனச் சட்டத்தின் 2 ஆம் பிரிவிற்கமைய, 2018.08.24 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2015.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்துக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புகள் உள்ளடங்கலான அறுவடைக்குப் பிந்திய தொழில்நுட்ப நிறுவகத்தின் ஆண்டறிக்கையும் கணக்குகளும் அங்கீகரிக்கப்படுமாக.

(கமத்தொழில் மற்றும் காணிகள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2019.01.25 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

* 52.

கமத்தொழில், கிராமியப் பொருளாதார அலுவல்கள், நீர்ப்பாசனம், கடற்றொழில் மற்றும் நீரக வளமூலங்கள் அபிவிருத்தி அமைச்சர்,— நெல் சந்தைப்படுத்தும் சபையின் ஆண்டறிக்கையும் கணக்குகளும் (2013),— 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14 ஆம் பிரிவிற்கமைய, 2018.09.18 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2013.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்துக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புகள் உள்ளடங்கலான, நெல் சந்தைப்படுத்தும் சபையின் ஆண்டறிக்கையும் கணக்குகளும் அங்கீகரிக்கப்படுமாக.

(கமத்தொழில் மற்றும் காணிகள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2019.03.16 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

* 53.

கமத்தொழில், கிராமியப் பொருளாதார அலுவல்கள், நீர்ப்பாசனம், கடற்றொழில் மற்றும் நீரக வளமூலங்கள் அபிவிருத்தி அமைச்சர்,— கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபையின் ஆண்டறிக்கையும் கணக்குகளும் (2016),— 1999 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சட்டத்தின் 27 ஆம் பிரிவிற்கமைய, 2018.09.18 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2016.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்துக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புகள் உள்ளடங்கலான கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபையின் ஆண்டறிக்கையும் கணக்குகளும் அங்கீகரிக்கப்படுமாக.

(கமத்தொழில் மற்றும் காணிகள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2019.03.16 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

* 54.

கமத்தொழில், கிராமியப் பொருளாதார அலுவல்கள், நீர்ப்பாசனம், கடற்றொழில் மற்றும் நீரக வளமூலங்கள் அபிவிருத்தி அமைச்சர்,— ஹெக்டர் கொப்பேகடுவ விவசாய ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவகத்தின் ஆண்டறிக்கையும் கணக்குகளும் (2016),— 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(2)(C) ஆம் பிரிவிற்கமைய, 2018.10.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2016.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்துக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புகள் உள்ளடங்கலான ஹெக்டர் கொப்பேகடுவ விவசாய ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவகத்தின் ஆண்டறிக்கையும் கணக்குகளும் அங்கீகரிக்கப்படுமாக.

(கமத்தொழில் மற்றும் காணிகள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2019.03.16 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

* 55.

கமத்தொழில், கிராமியப் பொருளாதார அலுவல்கள், நீர்ப்பாசனம், கடற்றொழில் மற்றும் நீரக வளமூலங்கள் அபிவிருத்தி அமைச்சர்,— நெல் சந்தைப்படுத்தும் சபையின் ஆண்டறிக்கையும் கணக்குகளும் (2014),— 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14 ஆம் பிரிவிற்கமைய, 2019.05.22 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2014.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்துக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புகள் உள்ளடங்கலான, நெல் சந்தைப்படுத்தும் சபையின் ஆண்டறிக்கையும் கணக்குகளும் அங்கீகரிக்கப்படுமாக.

(கமத்தொழில் மற்றும் காணிகள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2019.07.11 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

* 56.

போக்குவரத்து மற்றும் சிவில் விமானச் சேவைகள் அமைச்சர்,— தேசிய போக்குவரத்து வைத்திய நிறுவகத்தின் வருடாந்த அறிக்கை மற்றும் கணக்குகள் (2015),— 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(2)(C) ஆம் பிரிவிற்கமைய, 2018.07.20 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2015.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்துக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் உள்ளடங்கலான தேசிய போக்குவரத்து வைத்திய நிறுவகத்தின் வருடாந்த அறிக்கை மற்றும் கணக்குகள் அங்கீகரிக்கப்படுமாக.

(போக்குவரத்து மற்றும் தொலைத்தொடர்பு பற்றிய துறைசார் மேற்பார்வைக் பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2019.06.07 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

* 57.

போக்குவரத்து மற்றும் சிவில் விமானச் சேவைகள் அமைச்சர்,— இலங்கை சிவில் விமானச்சேவைகள் அதிகாரசபையின் வருடாந்த அறிக்கை மற்றும் கணக்குகள் (2015),— 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(2)(C) ஆம் பிரிவிற்கமைய, 2017.11.25 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2015.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்துக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் உள்ளடங்கலான இலங்கை சிவில் விமானச்சேவைகள் அதிகாரசபையின் வருடாந்த அறிக்கை மற்றும் கணக்குகள் அங்கீகரிக்கப்படுமாக.

(போக்குவரத்து மற்றும் தொலைத்தொடர்பு பற்றிய துறைசார் மேற்பார்வைக் பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2019.06.07 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

* 58.

போக்குவரத்து மற்றும் சிவில் விமானச் சேவைகள் அமைச்சர்,— இலங்கை சிவில் விமானச்சேவைகள் அதிகாரசபையின் வருடாந்த அறிக்கை மற்றும் கணக்குகள் (2016),— 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(2)(C) ஆம் பிரிவிற்கமைய, 2018.10.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2016.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்துக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் உள்ளடங்கலான இலங்கை சிவில் விமானச்சேவைகள் அதிகாரசபையின் வருடாந்த அறிக்கை மற்றும் கணக்குகள் அங்கீகரிக்கப்படுமாக.

(போக்குவரத்து மற்றும் தொலைத்தொடர்பு பற்றிய துறைசார் மேற்பார்வைக் பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2019.06.07 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

* 59.

போக்குவரத்து மற்றும் சிவில் விமானச் சேவைகள் அமைச்சர்,— இலங்கை போக்குவரத்துச் சபையின் வருடாந்த அறிக்கை மற்றும் கணக்குகள் (2014),— 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(2)(C) ஆம் பிரிவிற்கமைய, 2019.01.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2014.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்துக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் உள்ளடங்கலான இலங்கை போக்குவரத்துச் சபையின் வருடாந்த அறிக்கை மற்றும் கணக்குகள் அங்கீகரிக்கப்படுமாக.

(போக்குவரத்து மற்றும் தொலைத்தொடர்பு பற்றிய துறைசார் மேற்பார்வைக் பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2019.06.07 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

* 60.

நிதி அமைச்சர்,— மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல் (இல.1),— மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் (52 ஆம் அத்தியாயமான) 25 ஆம் பிரிவின் கீழ், மதுவரி தொடர்பாக நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2018 சனவரி 18 ஆம் திகதிய 2054/42 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2018.05.22 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான அறிவித்தல் அங்கீகரிக்கப்படுமாக.

(மதுவரி அறிவித்தல் இலக்கம் 04/2018)

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 61.

நிதி அமைச்சர்,— மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல் (இல.2),— மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் (52 ஆம் அத்தியாயமான) 32 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 25 ஆம் பிரிவின் கீழ் வருடாந்த மதுபான உரிமக் கட்டணம் தொடர்பில் நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2017 திசெம்பர் 11 ஆம் திகதிய 2049/4 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2018.03.20 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான அறிவித்தல் அங்கீகரிக்கப்படுமாக.

(மதுவரி அறிவித்தல் இலக்கம் 1004)

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 62.

அரச தொழில் முயற்சிகள், மலைநாட்டு மரபுரிமைகள் மற்றும் கண்டி அபிவிருத்தி அமைச்சர்,— அரசியலமைப்பின் கீழ் தீர்மானம்,— பாராளுமன்றத்தில் ஆகக்கூடுதலான ஆசனங்களைப் பெற்றுள்ள ஐக்கிய தேசியக் கட்சியினால் தேசிய அரசாங்கமொன்று நிறுவப்பட்டுள்ளதால், இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 46 (4) உறுப்புரையின் பிரகாரம் அமைச்சரவை அமைச்சர்களினது எண்ணிக்கை 48 ஐ விட விஞ்சாதவாறு இருத்தல் வேண்டுமெனவும், அமைச்சரவை உறுப்பினர்கள் அல்லாத அமைச்சர்களினதும் பிரதி அமைச்சர்களினதும் எண்ணிக்கை 45 ஐ விட விஞ்சாதவாறு இருத்தல் வேண்டுமெனவும் இப்பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்படுகின்றது.

* 63.

பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு மாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழ் தீர்மானம்,— இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 104ஆ (5) (அ) உறுப்புரையின் பிரகாரம் தேர்தல்கள் ஆணைக்குழுவினால் ஆக்கப்பட்டு 2017 திசெம்பர் 04 ஆம் திகதிய 2048/1 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2018.01.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான மக்கள் தீர்ப்பொன்றுக்கான அல்லது தேர்தலொன்றுக்கான காலக்கெடுவின் போது இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடகங்கள் பின்பற்றியொழுக வேண்டிய ஒழுக்கநெறிகள் அல்லது வழிகாட்டு நெறிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 64.

பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு மாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சரும்,— அத்தியாவசிய பொதுமக்கள் சேவை சட்டத்தின் கீழ் கட்டளை,— 1979 ஆம் ஆண்டின் 61 ஆம் இலக்க, அத்தியாவசிய பொதுமக்கள் சேவை சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் பயணிகள் அல்லது பண்டங்களுக்கான அனைத்துப் பொதுப் போக்குவரத்துச் சேவைகளும் அத்தியாவசிய சேவைகள் என பிரகடனப்படுத்தல் தொடர்பில் சனாதிபதியால் பிரகடனப்படுத்தப்பட்டு, 2019 யூலை 27 ஆம் திகதிய 2133/65 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2019.08.01 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

* 65.

அரசியலமைப்பின் கீழ் பிரேரணை,— விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (2016 யூன் 22),— “இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 104ஆ (5) (அ) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளின் பிரகாரம், தேர்தல் ஆணைக்குழுவினால் 2016 பெப்புருவரி 25 ஆம் திகதிய 1955/19 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும், 2016.05.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான, மக்கள் தீர்ப்பொன்றுக்கான அல்லது தேர்தலொன்றுக்கான காலக்கெடுவின் போது இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடகங்கள் பின்பற்றியொழுக வேண்டிய ஒழுக்கநெறிகள் அல்லது வழிகாட்டு நெறிகள் அங்கீகரிக்கப்படுமாக” எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.

* 66.

பௌத்த அறநிலையங்கள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 67.

தேரவாத பிக்குமார்கள் கதிகாவத் (பதிவு செய்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

68.

சிறுவர் புனர்வாழ்வு மையம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

69.

இலங்கை ஐக்கிய கிறிஸ்தவ நட்புரிமை (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

70.

ஸ்ரீ லங்கா மகளிர் சம்மேளனம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

71.

மொணறாகல மாவட்ட கான்த்தா மஹா சங்கமய (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

72.

லசாலியன் சமூக கல்விச் சேவைகள் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

73.

சர்வதேச பெண்கள் மற்றும் பிள்ளைகளின் உரிமைகள் பேரவை (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

74.

ஆலோகா சமூக சேவை மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

75.

த இன்ஸ்டிட்யுட் ஒவ் சேர்டிபைட் பப்ளிக் அக்கவுன்டன்ஸ் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

76.

ஸ்ரீ சாக்கியசிங்காராம விகாரஸ்த கார்யசாதக சங்விதான (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

77.

இலங்கை கட்டிட சேவைகள் பொறியியல் மற்றும் தொழில்நுட்பவியல் நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

78.

டாக்டர். எஸ்.எஸ். குணவர்தன சுதேச ஆயுர்வேத அபிவிருத்தி மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

79.

மோகன் லங்கா மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

80.

சாயா மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றன.

---

[1] ''சட்டமூலம் இப்பொழுது இரண்டாம் முறையாக மதிப்பிடப்பெறுமாக'' எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.

---